19

12 FEB 2010

J.C.M.A
PAO
ITS

**சுருக்கம்**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் – முனைவர் P. கனகசபாபதி, இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் – பணிக்காலம் 22.01.2010 முதல் மேலும் இரண்டு ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நபரி) துறை

**அரசாணை (பத்தாண்டு) எண்.50** **நாள்:12.02.2010**

**படிக்க:**

1. அரசாணை (பத்தாண்டு) எண்.4, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 05.01.2007.
2. அரசாணை (பத்தாண்டு) எண்.187, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 15.05.2009
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் எண்.12371/2004/WB1 நாள் 28.01.2010.

**ஆணை:–**

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் முனைவர் P. கனகசபாபதி அவர்கள் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்நியமனத்திற்கான பணிவரையறைகள் (Terms and Conditions) வெளியிடப்பட்டுள்ளது.

3. மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் 39–வது நிர்வாகக் குழுவின் கூட்டம் 22.01.2010 அன்று அரசு செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்றதாகவும், இக்கூட்டத்தில் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநராக பணியாற்றும் முனைவர் P. கனகசபாபதி அவர்களின் பணிக்காலம் 21.01.2010 அன்று முடிவடைவதனையடுத்து அன்னாரின் பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேலும் இரண்டாண்டுகளுக்கு நீட்டிக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, 22.01.2010 அன்று தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் நிர்வாகக் குழுவில் தீர்மானிக்கப்பட்டதற்கிணங்க தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் P. கனகசபாபதி அவர்களின் பணிக்காலத்தினை ஒப்பந்த அடிப்படையில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்து ஆணை பிறப்பிக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனமாக பரிசீலித்தது. பரிசீலனைக்குப் பின், கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநராக பணிபுரியும் முனைவர் P. கனகசபாபதி அவர்களின் பணிக்காலத்தினை 22.01.2010 முதல் ஒப்பந்த அடிப்படையில் மேலும் இரண்டு ஆண்டு காலத்திற்கு நீட்டிக்கலாம் என கருதி, அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

5. இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணி வரையறைகளில், (Terms and conditions) முதலாவது வரையறையைத் தவிர மற்ற வரையறைகள் அனைத்தும் இந்நியமனத்திற்கு பொருந்தும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
முனைவர் P. கனகசபாபதி, இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர்.
இயக்குநர், உள்ளாட்சி தணிக்கைத் துறை, சென்னை – 600 108.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.

நகல்:–
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்